# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.259/2023

Deposition of witness – PW–13

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மணி | Caste | : | |
| S/o. | : | ஆனந்தகவுண்டர் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 27.01.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

<u>முதல் விசாரணை :</u>

நான் கருக்கப்பட்டியில் குடியிருக்கிறேன். என் மனைவி பெயர் தனம். எங்களுக்கு 2 மகன்கள். அவர்களின் பெயர்கள் தினேஷ்குமார், ராஜ்குமார். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அவர் எனக்கு தம்பி ஆவார்.

எனக்கு 30 செண்ட் நிலம் ஊரில் உள்ளது. அ.சா.12–சுந்தரம் எனது பக்கத்துகாட்டுக்காரர். என் நிலத்தில் அருகில் உள்ள கிணறு எனக்கும் சுந்தரத்திற்கும் கூட்டு பாத்திய கிணறு. நாள் கணக்கில்

தண்ணீரை திறந்துவிடுவது வழக்கம். எங்கள் காட்டிற்கு அருகே ஐயனாரப்பன் சாமி கோவில் ஒன்றை நான் கட்டி வருகிறேன்.

சுமார் 2 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் காலை 9.00 மணிக்கு என் மகன் ராஜ்குமார் மோட்டார் போடுவதற்கு கிணற்றுக்கு போனபோது மோட்டார் போட்டும் தண்ணீர் வரவில்லை என்றும் மோட்டாரை சரிசெய்து பார்த்தபோது ஒரு பிரேதம் இருந்ததாக பார்த்துவிட்டு எனக்கு தகவல் சொன்னார். நான் தகவல் தெரிந்து கிணற்றுக்கு போனேன். கிணற்றை பார்த்தபோது கிணற்றில் ஒரு பிரேதம் இருந்தது. போலிசாருக்கு தகவல் சொல்லி, போலிசாரும் தீயணைப்புதுறையினரும் வந்தார்கள். போலிசார் தண்ணீரை வெளியே எடுத்தார்கள். பிரேதமானது துண்டு துண்டாக வெட்டுப்பட்டு இருந்தது. இறந்த நபர் பெயர் மணி என்று கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/– S.Sumathy,

Principal Sessions Judge, Salem.